நகரில் நடப்பவை

திருச்சி

- **திங்க் இட், பிளான் இட், லாஞ்ச் இட் ஸ்டார்ட் அப் முதலாம் ஆண்டு மாணவர்களுக்கான நிகழ்ச்சி:** கேர் பொறியியல் கல்லூரி, செமினார் ஹால், பிற்பகல் 2.
- **இணையத்தைப் பாதுகாப்பாக பயன்படுத்துவது குறித்த கருத்துரை:** சிறப்பு விருந்தினர்- வழக்கறிஞர் பி.பிரகாஷ், ஜெயேந்திரா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி வளாகம், கீழரண் சாலை, ஆனந்தா அவென்யூ, பிற்பகல் 2.
- **சொற்பொழிவு:** முனைவர் சு.செயலாபதி, திருச்சிராப்பள்ளித் தமிழ்ச் சங்கம், மேலரண் சாலை, மாலை 6.30.

பெரம்பலூர்

- **மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு வங்கி நிதி இணைப்பு அட்டை வழங்கல்:** தலைமை- ஆட்சியர் அப்துல் ராசிக், எம்எல்ஏ சிவக்குமார், ஏற்பாடு- தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், ஆட்சியர் அலுவலகம், காலை 10.

தஞ்சாவூர்

- **கிரீன் மேஜிக் பிளஸ் புதுவகை பால் அறிமுக விழா:** தஞ்சாவூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம், பங்கேற்பு- வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை அமைச்சர் ஆர்.வினோத், தஞ்சாவூர் மத்திய பால்பண்ணை வளாகம், காலை 10.30.
- **ஆர்ப்பாட்டம்:** தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம், பனகல் கட்டிடம், தஞ்சாவூர், மாலை 5.45.

கும்பகோணம்

- **பருத்தி மறைமுக ஏலம்:** ஒழுங்குமுறை விற்பனைக் கூடம், முற்பகல் 11.

சின்னச் சின்னதாய்

காவிரி- குண்டாறு- வைகை இணைப்பு திட்டத்தை விரைவுபடுத்த வலியுறுத்தல்

■ கரூர்

தமிழ்நாடு விவசாயிகள் சங்கங்களின் கூட்டமைப்பின் செயலாளர் செ.நல்லசாமி, கரூரில் நேற்று செய்தியாளர்களிடம் கூறியது:

புதுக்கோட்டை மாவட்டத்தில் ஒரு பகுதி மட்டுமே காவிரிப் பாசனம் பெறுகிறது. பிற பகுதிகள் ஏரி, குளங்களை நம்பியுள்ளன. எனவே, கரூர், திருச்சி, புதுக்கோட்டை, சிவகங்கை உள்ளிட்ட 7 மாவட்டங்கள் பயன்பெறும் வகையில் காவிரி- குண்டாறு- வைகை இணைப்புத் திட்டத்தை விரைவாக செயல்படுத்தினால் புதுக்கோட்டை மாவட்டம் பயன்பெறும். ஆனால், காவிரி உபரி நீரை பயன்படுத்தும் தொலைநோக்கு பார்வை அரசிடம் இல்லை. அதேபோல காகித ஆலைகளுக்காக மாவட்டத்தில் யூகலிப்டஸ் மரங்கள் வளர்க்கப்பட்டதால் வறட்சி ஏற்பட்டு சுற்றுச்சூழல் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் ரமேஷ், அவரது ஆதரவு விவசாயிகளுக்கு திருச்சியில் பரிசு வழங்கியுள்ளார். மற்ற விவசாயிகளை அவர் சந்திப்பதில்லை என்றார்.



திருச்சியில் நேற்று போராட்டத்தில் ஈடுபட்ட மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர். படம்: ர.செல்வமுத்துகுமார்

விலைவாசி உயர்வை கண்டித்து கம்யூனிஸ்ட் கட்சியினர் ஆர்ப்பாட்டம்

■ திருச்சி/ புதுக்கோட்டை/ கரூர்

விலைவாசி உயர்வை கட்டுப்படுத்தவில்லை என மத்திய, மாநில அரசுகளைக் கண்டித்தும், விலைவாசி உயர்வை கட்டுப்படுத்த வலியுறுத்தியும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மற்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினர் நேற்று பல்வேறு மாவட்டங்களில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது அத்தியாவசிய உணவுப் பொருட்கள் மற்றும் சமையல் காஸ், மின் கட்டணம், பெட்ரோல், டீசல் ஆகியவற்றின் விலை உயர்வை கட்டுப்படுத்த வேண்டும் என முழக்கம் எழுப்பினர்.

திருச்சி மாநகரில் தென்னூர், மரக்கடை, சுப்பிரமணியபுரம் ஆகிய பகுதியில் 2 கம்யூனிஸ்ட் கட்சிகளும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டன. மரக்கடையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்துக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் பகுதிச் செயலாளர் ராமர், தென்னூரில் பகுதிச் செயலாளர் சந்திரன் ஆகியோர் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

புதுக்கோட்டை அண்ணா சிலை அருகே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநகரச் செயலாளர் எஸ்.பாண்டியன் தலைமையில் சிஐடியு மாவட்டச் செயலாளர் எஸ்.ஸ்ரீதர், மாவட்டத் தலைவர் கே.முகமதலி ஜின்னா உள்ளிட்டோர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதேபோல, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் புதுக்கோட்டை அண்ணா சிலை அருகில் மாவட்டச் செயலாளர் த.செங்கோடன், கரூர் தலைமை அஞ்சல் நிலையம் முன்பு மாவட்டச் செயலாளர் கே.கலாராணி, ஜெயங்கொண்டம் காந்தி பூங்கா முன்பு மாவட்டச் செயலாளர் நடராஜன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஒரு மாத ஊதியத்தை போனஸாக வழங்க கோரிக்கை

■ திருச்சி

திருச்சி மாநகராட்சியில் தனியார் நிறுவனத்தின் மூலம் ஒப்பந்த முறையில் 3 ஆண்டுகளுக்கும் மேலாக பணிபுரிந்து வரும் தூய்மைப் பணியாளர்கள், மாநகராட்சி பள்ளிகளின் தூய்மைப் பணியாளர்கள், வாகன ஓட்டுநர்கள், மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி ஆபரேட்டர்கள் ஆகியோருக்கு அக்டோபர் மாத ஊதியத்துடன், ஒரு மாத ஊதியத்தை தீபாவளி போனஸாக சேர்த்து வழங்க வலியுறுத்தி, திருச்சி மாநகர் செங்கொடி தொழிலாளர் சங்கத்தினர், மாநகராட்சி அலுவலக வளாகத்தில் நேற்று மனு கொடுக்கும் போராட்டம் நடத்தினர்.

சங்கத்தின் மாவட்டத் தலைவர் இளையராஜா தலைமை வகித்தார். மாவட்டச் செயலாளர் மணிமாறன், நிர்வாகிகள் ராஜு மற்றும் 100-க்கும் அதிகமான தொழிலாளர்கள் பங்கேற்றனர்.

குளம் வெட்ட பொக்லைன் பயன்படுத்திய சில்லக்குடி ஊராட்சி செயலர் பணி நீக்கம்

■ பெரம்பலூர்

பெரம்பலூர் மாவட்டம் ஆலத்தூர் ஊராட்சி ஒன்றியம் சில்லக்குடி கிராமத்தில் கடந்த மாதம் புதிய குளம் வெட்டுதல், வரத்து வாய்க்கால், ஏரி வெட்டுதல், மண் கரைகளைப்பலப்படுத்துதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இந்தப் பணிகள் 100 நாள் வேலை திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப் பட்டாலும், தொழிலாளர்களை பணியமர்த்தாமல், பொக்லைன் பயன்படுத்தி பணி மேற்கொள்ளப்பட்டது தெரியவந்தது.

இதுகுறித்து மேத்தால் கிராமத்தைச் சேர்ந்த ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் த.பன்னீர்செல்வம், ஆட்சியரிடம் செப்டம்பர் மாதம் புகார் மனு அளித்தார். இதையடுத்து, ஆட்சியர் அப்துல் ராசிக் உத்தரவின்பேரில் ஆலத்தூர் வட்டார வளர்ச்சி அலுவலர் விசாரணை நடத்தினார். இதில் சில்லக்குடி கிராம ஊராட்சி செயலராக இருந்த ஆர்.ராஜசேகர், 100 நாள் வேலை திட்டத்துக்கு பொக்லைன் பயன்படுத்தியது உறுதி செய்யப்பட்டது.

இதையடுத்து, சில்லக்குடி ஊராட்சி செயலர் ஆர்.ராஜசேகரை அண்மையில் பணிநீக்கம் செய்து ஆட்சியர் அப்துல் ராசிக் உத்தரவிட்டார். மேலும், ஆலத்தூர் வட்டத்தில் 100 நாள் வேலை திட்டத்துக்கு நியமிக்கப்பட்ட அனைத்து பணித்தள பொறுப்பாளர்களும் பணி நீக்கம் செய்யப்பட்டு, தற்போது புதிய பணித்தளப் பொறுப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், “தேனூரில் குளம் வெட்ட பொக்லைன் பயன்படுத்திய விவகாரத்தில் இதுவரை யார் மீதும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதுகுறித்து ஆலத்தூர் வட்டார வளர்ச்சி அலுவலர் விசாரித்து அறிக்கை அளித்த பிறகே, அதனடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும்'' என பெரம்பலூர் மாவட்ட திட்ட இயக்குநர் ஜெயராமன் தெரிவித்தார்.

ஹெல்மெட் அணிந்து வாகனம் ஓட்டியவர்களுக்கு போலீஸார் பரிசு

■ பெரம்பலூர்

பெரம்பலூரில் நான்குரோடு, திருச்சி-சென்னை தேசிய நெடுஞ்சாலை, பழைய மற்றும் புதிய பேருந்து நிலையம், ஆத்தூர் ரோடு உள்ளிட்ட பகுதிகளில் ஹெல்மெட் அணிந்து வந்த வாகன ஓட்டிகளுக்கு பட்டாசுகள் பரிசாக வழங்கப்பட்டது.

பெரம்பலூர் போக்குவரத்து சப்-இன்ஸ்பெக்டர் சந்திரபோஸ் தலைமையிலான போலீஸார், ஹெல்மெட் அணிந்து இருசக்கர வாகனம் ஓட்டியவர்களுக்கு ரூ.1,000 மதிப்பிலான தீபாவளி பட்டாசுகளை பரிசாக வழங்கினர். அப்போது, பொதுமக்கள் ஹெல்மெட் அணிந்து பயணித்து, விபத்து இல்லாத மாவட்டமாக பெரம்பலூரை மாற்ற வேண்டும் என விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

குத்துச்சண்டை வீரர் விபத்தில் உயிரிழப்பு

■ அரியலூர்

அரியலூர் மாவட்டம் கணபதி நகரைச் சேர்ந்தவர் சுரேஷ் மகன் சாய்நிவேஷ்(17). இவர், நேற்று அரியலூரில் இருந்து எறையூருக்குச் தனது அத்தை பிரபாவதியை இருசக்கர வாகனத்தில்ஏற்றிக்கொண்டுசென்று கொண்டிருந்தார். அப்போது, அல்லிநகரம் புறவழிச் சாலையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கனரக வாகனம் மீது இருசக்கர வாகனம் மோதியதில் சாய்நிவேஷ் அந்த இடத்திலேயே உயிரிழந்தார். பிரபாவதி காயமடைந்தார். சாய்நிவேஷ், குத்துச்சண்டை மற்றும் துப்பாக்கி சுடும் வீரர் என்றும், பல்வேறு போட்டிகளில் பங்கேற்று வெற்றி பெற்றுள்ளதாகவும் கூறப்படுகிறது. குன்னம் போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரிக்கின்றனர்.

டாஸ்மாக் பணியாளர்கள் 395 பேருக்கு மெமோ

■ திருச்சி/ புதுக்கோட்டை/ கரூர்

தமிழகம் முழுவதும் உள்ள டாஸ்மாக் கடைகளில் ரூ.1,000-க்கு மேல் மதுபானம் வாங்கும்போது இணையவழி பரிவர்த்தனையில் மட்டுமே பணம் செலுத்த வேண்டும். காலி மதுபான பாட்டில்களையும் ஸ்கேன் செய்துதான் பெற வேண்டும் ஆகிய நிபந்தனைகள் நவ.1-ம் தேதி முதல் அமலுக்கு வந்தன. ஆனால் காலி மதுபான பாட்டிலை திரும்பப் பெறுவதில் ஸ்கேன் செய்ய வேண்டும் என்ற நிபந்தனையைக் கைவிட வேண்டும் என வலியுறுத்தி டாஸ்மாக் பணியாளர்கள் நவ.1, 2 ஆகிய தேதிகளில் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

இதையடுத்து, மதுபான பாட்டிலை திரும்பப் பெறும்போது ஸ்கேன் செய்யும் நடைமுறையை தற்காலிகமாக நிறுத்தி வைப்பதாக டாஸ்மாக் நிர்வாகம் அறிவித்தது. இதையடுத்து, டாஸ்மாக் கடைகள் படிப்படியாக திறக்கப்பட்டு நேற்று வழக்கம்போல இயங்கின.

ஆனால், 2 நாட்கள் கடைகளைத் திறக்காமல் போராட்டத்தில் ஈடுபட்டதற்காக விளக்கம் கேட்டு திருச்சி மாவட்டத்தில் 185 பேர், புதுக்கோட்டை மாவட்டத்தில் 175 பேர், கரூர் மாவட்டத்தில் 35 பேர் என மொத்தம் 395 பேருக்கு மெமோ வழங்கப்பட்டது.

அரசியல் கட்சிகள், சங்கங்கள், சமூக அமைப்புகள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் இதர அமைப்புகள் தங்களது செய்தி அறிக்கைகள், நிகழ்ச்சிகள் குறித்த விவரங்களை எங்களது நாளிதழுக்கு மின்னஞ்சல் வழியாக அனுப்பலாம்.

மின்னஞ்சல் முகவரி: reptrichy@hindutamil.co.in

வரி விளம்பரங்கள்

பொது

விற்பனை



இந்து தமிழ் திசை

பொறுப்பல்ல: இந்தச் செய்தித்தாளில் பிரசுரம் ஆகியுள்ள விளம்பரங்களின் அடிப்படையில் செயல்படும் முன், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர்/ அவர்களின் தயாரிப்புகள் / சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / கே.எஸ்.எல். மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் கேடு அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித்தாளின்/ மேற்சொன்ன நிறுவனங்களின் உரிமையாளர், பதிப்பாளர், அச்சிடுவோர், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர்கள் ஆகியோர் எந்தச் சூழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.

படைப்புகளை அனுப்புவோர் பிரதி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்பவும். பிரசுரமாகாதவற்றைத் திரும்ப அனுப்ப இயலாது.

ஆவின் TID 483 தேனி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிமிடெட்
3-1-11/1, நடேஷ் அபார்ட்ஸ், அம்மன் நகர், பழனிசெட்டிபட்டி, தேனி - 625 531.
மின்னஞ்சல் : gmaavintheni@gmail.com

ந.க.எண் :71/P&I/2026 நாள் : 02.11.2026

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

பொது மேலாளர், தேனி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிட்., 3-1-11/1, நடேஷ் அபார்ட்ஸ், அம்மன் நகர், பி.சி.பட்டி, தேனி -625 531 அவர்களால் 2026-2028 ம் ஆண்டிற்கு 7 பால்சேகர வழித்தடங்களில் 7 எண்ணிக்கை கொண்ட Pick Up வாகனங்கள் ஒப்பந்த அடிப்படையில் இயக்கிட இரட்டைக் கவர் முறையில் மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. இதற்கான முன்வைப்புத் தொகை ரூ.15,000/- ஆகும். ஒப்பந்தப் படிவங்களை 06.11.2026 காலை 10.00 மணி முதல் 22.11.2026 இரவு 10.00 மணி வரை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

ஒப்பந்தப்புள்ளி படிவங்களை 23.11.2026 முற்பகல் 10.00 மணி வரை சமர்ப்பிக்கலாம். அதற்கு பின்னர் பதிவேற்றம் செய்யப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் 23.11.2026 முற்பகல் 11.00 மணிக்கு திறக்கப்படும். ஒப்பந்ததாரர்களின் முன் சந்திப்பு கூட்டம் 13.11.2026 முற்பகல் 11.30 மணி அளவில் தலைமை அலுவலகத்தில் நடைபெறும். ஒப்பந்தப்புள்ளிகளை www.tntenders.gov.in என்ற இணையதளத்தில் இலவசமாக பதிவிறக்கம் செய்து மேற்கண்ட இணையத்தில் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும். ஒப்பந்த படிவங்கள் நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ பெறப்பட மாட்டாது.

தொடர்புக்கு : gmaavintheni@gmail.com, தொலைபேசி எண் : 9344258966, 9976152074

செ.ம.தொ.இ./3366/ஒப்பந்தப்புள்ளி/2026 பொது மேலாளர், தேனி.மா.கூ.பா.உ.ஒன்றியம் லிட்.,

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம்

மின்னணு – ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

மின்னணு ஒப்பந்தப்புள்ளி, தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து, கீழ்க்காணும் பணிக்காக சென்னைக் குடிநீர்வாரியத்தில் மேற்கொள்ளும் முறைப்படி ஒரு உறையில் தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தங்கள் சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000க்குட்பட்டு இ–ஒப்பந்தங்கள் கோரப்படுகின்றன.

வ. எண்	ஒப்பந்தப்புள்ளியின் பெயர் மற்றும் எண்	ஒப்பந்த முன் வைப்புத் தொகை	தகுதி	மின்னணு ஒப்பந்தம் சமர்ப்பிப்பு இறுதி தேதி	மின்னணு ஒப்பந்தம் திறக்கப்படும் தேதி
1	பகுதி V, பணிமனை – 62 நேப்பியர் பூங்காவில் உள்ள 600 மி.மீ விட்டமுள்ள உந்து குழாயை வழி மாற்றும் பணி. ஒ/வ/கழீர்/வைப்பு/3783/2026–27	ரூ. 1,96,800.00	வகுப்பு I அ	24.11.2026 அன்று பிற்பகல் 3.00 மணி வரை	25.11.2026 அன்று பிற்பகல் 3.00 மணிக்குப் பிறகு
2	ஒப்பந்த முன்வைப்பு தொகையை இணையவழி பரிவர்த்தனையாக இணையதளத்தின் மூலமாக மட்டுமே செலுத்தப்படவேண்டும். ஒப்பந்ததாரர்கள் இணையவழியில் ஒப்பந்த முன்வைப்பு தொகையை செலுத்தியதற்கான ஸ்கேன் செய்யப்பட்ட நகலை ஒப்பந்தப்புள்ளி ஆவணத்தின் ஒரு பகுதியாக சமர்ப்பிக்கவேண்டும்.				
3	ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் இ – ஒப்பந்தப்புள்ளிகளை www.tntenders.gov.in இணையதளத்தின் மூலமாக மட்டுமே சமர்ப்பிக்கலாம். பிற அனைத்து விவரங்களையும் 05.11.2026 முதல் இணையதளத்தில் வெளியாகும் ஒப்பந்தப்புள்ளி ஆவணத்தில் பார்வையிடவும்.				

செ.ம.தொ.இ/3369/ஒப்பந்தப்புள்ளி/2026 மேற்பார்வை பொறியாளர் (ஓமக)(பொ)

ESAF
ESAF SMALL FINANCE BANK
REGD. OFFICE: ESAF Bhavan, Mannuthy, Thrissur- 680 651, Kerala

தங்கநகை ஏல அறிவிப்பு

ஈஸஃப் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் உடன் உறுதிசெய்யப்பட்ட தங்க ஆபரணங்கள் மற்றும் கீழே பட்டியலிடப்பட்டுள்ள கிளை/கள் கடன் பெறுபவர்களால் மீட்கப்படாமல், மீண்டும் மீண்டும் நினைவுபடுத்தி மற்றும் அறிவிப்புகளை கொடுத்து இருந்தாலும் கூட கீழே கொடுக்கப்பட்டுள்ள விவரங்களின்படி ஏலம் விடப்படும் என்று சம்பந்தப்பட்ட அனைவரும் தகவலை தெரிந்துகொள்வதற்காக இதன்மூலம் இந்த அறிவிப்பு வழங்கப்படுகிறது.

ஏலம் விடப்படும் தேதி : 17-11-2026 நேரம் : 2pm to 5 pm
நஏலம் விடப்படும் இடம் : இ-ஏலம் மூலம்
விப்புகளை : https://egold.auctiontiger.net
Contact Number: 9099013705 / 6351896640

விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை பார்த்து மற்றும் இ-ஏலத்தின் முழு விவரங்களுடன் இ-ஏலத்திற்காக ஏலம் கேட்பவராக பதிவு செய்வதற்கு தயவுசெய்து மேலே கொடுக்கப்பட்டுள்ள தளத்திற்கு வருகைதாருங்கள்

கிளை பெயர் - கடன் கணக்கு எண்.

Anamalai: 75260000855823, 0954396, 0965986, Annur: 75260000819392, 1040199, Coimbatore - R S Puram: 75260000953338, 1025918, 1116577, Coimbatore Trichy Road: 75260000826508, Kanjappally: 75260000505673, 0516202, 0966564, 0991166, Kuniyamuthur: 75260000853926, Mettupalayam: 75260000845202, 0875705, 0937409, 0992844, 1053835, 1120289, 1122036, Pollachi: 75260000637654, 0811986, 0837817, 0948188, 0991196, 1004128, 1009579, 1011765, Singanallur (OndiPuthur): 75260001122726, Thalakkarai: 63260000521629, Thondamuthur: 75260000854535, 0882991, Thudiyalur: 75260000631645, 0868538, 0915581, 0945424, 0962061, 0976295, 1117386, Vadapudur: 75260001054003, Bhuvanagiri: 75260001023472, 1931443, Cuddalore: 75260000879547, Dindigul: 75260000704758, 0790654, 0966444, 1027435, Palani: 75260000839684, 1089556, Anthiyur: 75260001030838, Erode: 75260001066680, Sathyamangalam: 75260000445695, 0679564, 0704248, 0871602, 0872370, 1088048, 1088618, Tirukkoyilur: 75250002805153, 75260000629529, 0703510, 0742106, 0796863, 0824182, 0859866, 0901147, 0942509, 0988882, 0993562, 1036167, 1050230, 1071850, 1072968, Ulundurpettai: 75260000836859, 0837187, 0904102, 0913035, 0927048, 0935223, 0954416, 0984609, 1039632, 1043154, 1049143, 1069645, 1086968, Kanchipuram: 75260000862429, 1052086, 1076211, Kattankulathur: 75260000966914, Keelkatalai: 75260000913815, Kovalam: 75260000894628, 1125230Madhurantakam,: 75260000969818, Thakkalai: 75260000630946, 0947500, 0997585, Madurai: 75260000942489, 1033043, 1050430, Nagapattinam: 75260000756189, 1041447, 1047666, 1049083, 1055631, 1079676, 1084096, 1114661, Gudalur: 75260000837987, 0913415, 0915461, 0974688, 1037386, 1063096, 1119252, 1258209, Kottagiri: 75260000850572, 0854145, 0870764, 0911938, 0940403, 0953248, 1081311, 1081671, 1350756, 1409716, Manjoor-Selas: 75260000584542, 0865424, 1012753, 1018822, 1093008, Ooty: 75260000860863, 0901707, 0915041, 0933386, 0933796, 0936271, 0943367, 1010336, 1044812, 1087440, 1092500, 1096423, 1121617, Salem: 75260000602330, Alangulam: 75260000871652, 1059604, 1117096, Puliankudi: 75260000962981, Thanjavur: 75260000779776, 0995348, 0996646, 1023192, 1023832, 1032825, Andipatti: 75260000887142, 1056019, Minjur: 75260000972072, Cheyyar: 75260001027585, Kovilpatti: 75260000932658, 1093228, 1097421, 1225092, 1250564, Sathankulam: 75260000406189, Ambasamudram: 75260000783807, 0857649, 0945194, 0989700, 1029321, 1088168, Palayamkottai-Tirunelveli: 75260000811866, 0852338, 0921229, 0933746, 1048095, 1078807, 1089026, 1094346, 1095815, Dharapuram: 63260000379186, 0380033, 0385474, 75260000513867, Tindivanam: 75260000774865, 0979099, 0991186, 1005396, 1057987, 1061159, Viluppuram: 75260000987824, Mallankinaru: 75260000993502, Kariyampalayam: 75260000833245, 0989730, 1080513, 1085464, 1100387, Ramanathapuram: 75260000815399, 0684017, 0895346, 0913905, 0924254, 0930902, 0960355, 1025068, 1029811, 1124352, Tiruchirapalli: 75260000642514, 0860273, 0875195, 0897013, 0923546, 0959557, 0991346, 1016426, 1025398, 1041467, 1109071.

மொத்த நிலுவைத் தொகையை செலுத்தி ஆபரணங்களை மீட்டெடுக்க ஆர்வமுள்ள வாடிக்கையாளர்கள், சம்பந்தப்பட்ட கிளைகளில் (ஏலம் விடும் தேதிக்கு 2 நாட்களுக்கு முன்பு) அல்லது அதற்கு முன்பு இதை செய்யலாம்.

ஏலத்தில் பங்கேற்க விரும்பும் ஏலம் கேட்பவர்கள் தங்களின் கேஒய்சி (KYC) ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும். பதிவு செய்யப்பட்ட அமைப்பு/நிறுவனத்திற்கு ஜிஎஸ்டி எண் கட்டாயமாகும். ஏலத்தில் பங்கேற்பதற்கு முன்பு ஏலம் கேட்பவர்கள் ரூ. 50,000 மொத்த தொகையை ஈஎம்டி ஆக டெப்பாசிட் செய்ய வேண்டும்.

இடம் : திரிச்சூர் (Sd/-) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
நாள் : 04-11-2026 ESAF ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்

TATA

டாடா கேபிட்டல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம்: 11வது தளம், டவர் ஏ, பெனிசுலா பிசினஸ் பார்க், கணபத்ராவ், கடம் மார்க், லோவர் பெரல், மும்பை-400013.
கிளை அலுவலகம்: 1வது தளம், சென்டனியல் ஸ்கூயர், # 6A, Dr. அம்பேத்கர் சாலை, கோடம்பாக்கம், சென்னை - 600 024.

அசையா சொத்துக்கள் விற்பனைக்கான அறிவிப்பு
(பாதுகாப்பு வட்டி (அமலாக்கம்) விதிகள் 2002-ன் விதி 8(6) மற்றும் விதி 9(1)-ன்கீழ்)

2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் மறுகட்டமைப்பு செய்தல் மற்றும் பாதுகாப்பு வட்டிச் சட்டத்தின் அமலாக்கம் மற்றும் 2002-ம் ஆண்டு (அமலாக்கம்) பாதுகாப்பு வட்டி விதிகள் 8(6) மற்றும் விதி 9(1)-ன்கீழ் மின்-ஏலம் மூலம் அசையா சொத்துக்களை விற்பனை செய்வதற்கான 15 நாள்களுக்கான மின்-ஏலம் விற்பனை அறிவிப்பு.

இதன் மூலம் பொது மக்களுக்கு பொதுவாகவும் மற்றும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர் மற்றும்/இணை கடன்தாரர் அல்லது அவர்களின் சட்டப்பூர்வ வாரிசுகள்/பிரதிநிதிகளுக்கு (கடன்தாரர்கள்) ஆகியோருக்கு குறிப்பாகவும், கடன்அளித்தவரால் அறிவிக்கப்படும் அறிவிப்பாகும், TCHFLயின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் டாடா கேபிட்டல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் (TCHFL)-க்கு அடமானம் வைக்கப்பட்டுள்ள, கீழே குறிப்பிடப்பட்டுள்ள அசையாச் சொத்து, கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர் மற்றும் இணை கடன்தாரர்களிடமிருந்து நிலுவையில் உள்ள தொகையை வசூலிக்க 20.11.2026 அன்று "இருக்கும் நிலையில்" மற்றும் "எது இருந்தாலும்" என்ற அடிப்படையில் "எந்த ஆதாரமும் இல்லாமல்" விற்கப்படும். ரிசர்வ் விலை மற்றும் அதிகபட்ச வைப்புத் தொகை கீழே குறிப்பிடப்பட்டுள்ளது. விற்பனையில் ஏதேனும் ஒத்திவைப்பு/நிறுத்தம் இல்லாத நிலையில், மேற்கூறிய பாதுகாக்கப்பட்ட சொத்து/சொத்துக்கள் மேற்கூறிய 20.11.2026 அன்று பிற்பகல் 2.00 மணிக்கு மின்-ஏலத்தில் விற்கப்படும் என்று இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது. மின்னணு ஏலத்தில் பங்கேற்பதற்கான கோரிக்கை, நு.ஆறு வரைவோலையைக் கொண்ட சீல் வைக்கப்பட்ட உறை TCHFL அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிக்கு 19.11.2026 அன்று மாலை 5.00 மணி அல்லது அதற்கு முன் கிளை முகவரி டாடா கேபிட்டல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட், 1வது தளம், சென்டனியல் ஸ்கூயர், #6A, Dr. அம்பேத்கர் சாலை, கோடம்பாக்கம், சென்னை - 600 024 என்ற முகவரியில் சமர்ப்பிக்க வேண்டும்.

கீழே விவரிக்கப்பட்டுள்ள சுருக்கமான விவரங்களின்படி, பாதுகாக்கப்பட்ட சொத்து/அசையாச் சொத்தின் விற்பனை "உள்ளது உள்ளபடியே உள்ள இடத்தில் உள்ளபடியே" நடைபெறும்.

வ. எண்	கடன் கணக்கு எண்.	கடன்தாரர்(கள்)/ இணை-கடன்தாரர்(கள்) சட்ட வாரிசு(கள்)/சட்ட பிரதிநிதிகள்/ ஜாமீன்தாரர்(கள்)	கோரிக்கை அறிவிப்பின்படி தொகை	ரிசர்வ் தொகை	நிலுவைத் தொகை
5	TCHHL0940000100323062 & TCHIN0940000100325858	திரு. நாகராஜ் S திருமதி. சித்ரா	ரூ.31,99,069/- மற்றும் 05.08.2025	ரூ.36,85,000/- முன்வைப்புத் தொகை (EMD) : ரூ.3,68,500/- சுவாதீனம் வகை : பிசிக்கல்	ரூ.3979920/- மற்றும் 23.10.2026

அசையா சொத்தின் விவரம்: கரூர் மாவட்டம், கரூர் RD, வெள்ளியானை SRO, கரூர் தாலுகா, ஈமூர் கிராமம், சர்வே எண். 345/1, புஞ்சை ஏக்கர் 13.72 சென்ட்ஸ், இதில் புதிய துணை பிரிவு சர்வே எண். 345/1A, புஞ்சை Hec.0.63.0, இதில் புஞ்சை ஏக்கர் 1.56 சென்ட்ஸ், தற்போது துணை பிரிவு சர்வே எண். 345/1A2, புஞ்சை ஹெக். 0.41.0, இதில் புஞ்சை ஏக்கர் 1.01 சென்ட்ஸ், நிலம் "சீனிவாசன் நகர்" என்ற பெயரில் வீட்டு சைட்டுகளாக பிரிக்கப்பட்டது, ஒப்புதல் கரூர் மாவட்டம் நகர் மற்றும் ஊரமைப்பு திட்டம் இணை இயக்குநர், கரூர் மாவட்டம், R.O.C.N.R.L.L.E W.H.H.R/2022/DCB, நாள் 08.02.2023, லேஅவுட் (SWP/DRCP/Karur/Layout No.69/2023 ஒப்புதல் அளிக்கப்பட்டது தான்தோனி பஞ்சாயத்து யூனியன் எல்லை, ஈமூர் பஞ்சாயத்து தலைவர் Thrrrmana No.140/2022-2023, நாள் 14.03.2023 வீட்டு சைட் எண். 7, பரப்பு 1000 சதுர அடி (அல்லது) 92.90 சதுர மீட்டர் வீட்டு சைட் மற்றும் கட்டிடங்கள் மற்றும் பின்வரும் எல்லைகள்:- வீட்டு சைட் எண். 6 வடக்கே, சர்வே எண். 345/1A1 நிலங்களுக்கு மேற்கே, தெற்கு-வடக்கு சாலைக்கு கிழக்கே, பொது பஞ்சாயத்து நிலங்கள் மற்றும் TANDEDCO நிலங்களுக்கு தெற்கே. மற்றும் மேற்கூறிய எல்லைகள்:- கிழக்கு-மேற்கு இருபக்கமும் 50 அடி தெற்கு-வடக்கு இருபக்கமும் 20 அடி மொத்த பரப்பு 1000 சதுர அடி (அல்லது) 92.90 சதுர மீட்டர் வீட்டு சைட், மற்றும் கட்டிடங்கள் மற்றும் அனைத்து அறைகள், கதவுகள், கதவு பிட்டிங்ஸ், மின்சாரம் பிட்டிங்ஸ், வில், மின்சாரம் சர்வீஸ் இணைப்பு, மற்றும் வழக்கமான பாதை, பொது சாலை, பொது உரிமைகள் இதர. துணை பிரிவின்படி இந்த சொத்து தற்போது S.F.No.345/1A2A1A1-க்குட்பட்டது.

குறிப்பு: ஏலதாரர்கள் ஏலத்தை சமர்ப்பிக்கும் முன் உரிய விசாரணையை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். ஏலம் வழக்கு, தகராறு ஏதேனும் இருந்தால் அதன் முடிவுக்கு உட்பட்டது.

ஏலத்தில், பொதுமக்கள் பொதுவாக தங்கள் ஏலங்களை நேரில் சமர்ப்பிக்க அழைக்கப்படுகிறார்கள். இந்த விற்பனை தொடர்பாக எந்தவொரு கடமையும் கொண்ட எந்தவொரு அதிகாரியோ அல்லது வேறு நபரோ விற்கப்பட்ட அசையாச் சொத்தில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ எந்தவொரு பங்கையும் ஏலம் எடுக்கவோ, கையகப்படுத்தவோ அல்லது பெற முயற்சிக்கவோ கூடாது.

இந்த விற்பனை பாதுகாப்பு வட்டி (அமலாக்கம்) விதிகள் 2002-ல் பரிந்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கும், பின்வரும் கூடுதல் நிபந்தனைகளுக்கும் உட்பட்டது:

குறிப்பு : சொத்துக்களின் மின் ஏலம் http://bankauctions.in/ போர்டல் மூலம் 20.11.2026 அன்று மாலை 2.00 மணி முதல் மாலை 3.00 மணிக்கிடையில் நடைபெறும், ஒவ்வொன்று 5 நிமிடங்களுக்கு வரையறுக்கப்பட்ட நீட்டிப்பு.

விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் : 1) கீழே உள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்கள் கீழே கையொப்பமிட்டவரின் சிறந்த தகவலுக்கு ஏற்ப கூறப்பட்டுள்ளன, ஆனால் இந்த அறிவிப்பில் ஏதேனும் பிழை, தவறான அறிக்கை அல்லது விடுபடலுக்கு கீழே கையொப்பமிட்டவர் பொறுப்பேற்கமாட்டார், ஏலத்தொகை அல்லது ஏலதாரருக்கு ஏதேனும் தகராறு ஏற்பட்டால், அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியின் விருப்பத்திற்கு உட்பட்டு அசையாச் சொத்து மீண்டும் ஏலத்திற்கு விடப்படும். 2) அசையாச் சொத்து ரிசர்வ் விலைக்கு கீழே விற்கப்படாது. 3) ஏல உயர்வுத் தொகை: ரூ.10,000/- (ரூபாய் பத்தாயிரம் மட்டும்). 4) சொத்தை வாங்குவதற்காக ஏலங்களும் மேலே குறிப்பிடப்பட்டுள்ளபடி வைப்பு பணத்துடன் "டாடா கேபிட்டல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்" என்ற பெயரில் டிமாண்ட் டிராப்ட் மூலம் அனுப்பவேண்டும், கிளை முகவரியில் செலுத்தப்படும் டிமாண்ட் டிராப்ட்கள் ஏலத்திறக்குப் பிறகு தோல்வியுற்ற ஏலதாரர்களுக்கு திருப்பித் தரப்படும். NEFT/RTGS/IMPS மூலம் EMD செலுத்த, அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியை தொடர்பு கொள்ளவும். 5) அதிகபட்ச ஏலதாரர் எப்போதும் சட்டப்பூர்வமாக ஏலம் எடுக்கத் தகுதி பெற்றவராகவும், மேலும் ஏலத் தொகை இருப்பு விலையை விடக் குறைவாக இல்லாதவராகவும் இருந்தால், அவர் வெற்றிகரமான ஏலதாரராக அறிவிக்கப்படுவார், வழங்கப்பட்ட விலை மிகவும் போதுமானதாகத் தோன்றாத அளவுக்கு அவ்வாறு செய்வது விரும்பத்தகாததாகத் தோன்றும்போது, அதிகபட்ச ஏலத்தை ஏற்றுக்கொள்வதை மறுப்பது அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியின் விருப்பப்படி இருக்கும். 6) பதிவு செய்யப்பட்ட காரணங்களுக்காக, விற்பனையை ஒத்திவைப்பது/நிறுத்துவது அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியின் விருப்பப்படி இருக்கும். 7) அசையாச் சொத்தை ஆய்வு செய்வது 12.11.2026 அன்று காலை 11 மணி முதல் மாலை 5.00 மணி வரை முன் அனுமதியுடன் மேற்கொள்ளப்படலாம். 8) வெற்றிகரமான ஏலதாரராக அறிவிக்கப்பட்ட நபர், அத்தகைய அறிவிப்புக்குப் பிறகு உடனடியாக, EMD தொகையை உள்ளடக்கிய கொள்முதல் பணம்/ஏலத் தொகையில் இருபத்தைந்து சதவீதத்தை அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியிடம் 24 மணி நேரத்திற்குள் டெபாசிட் செய்ய வேண்டும், மேலும் அத்தகைய வைப்புத் தொகை செலுத்தத் தவறினால், சொத்து உடனடியாக தனியார் ஒப்பந்தத்தின் மூலம் புதிய ஏலம்/விற்பனைக்கு வைக்கப்படும். 9) மேற்கூறியபடி ஆரம்ப வைப்புத் தொகை செய்யப்பட்டால், செலுத்த வேண்டிய கொள்முதல் பணத்தின் மீதமுள்ள தொகையை வாங்குபவர் சொத்து விற்பனை உறுதிப்படுத்தப்பட்ட நாளிலிருந்து 15 நாட்களுக்கு முன்போ அல்லது அதற்கு முன்பாகவோ, அந்த நாளைத் தவிர்த்து அல்லது 15வது நாள் ஞாயிற்றுக்கிழமை அல்லது பிற விடுமுறை நாளாக இருந்தால், 15வது நாளுக்குப் பிறகு முதல் அலுவலக நாளில் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிக்கு செலுத்த வேண்டும். 10) மேலே குறிப்பிடப்பட்ட காலத்திற்குள் ஏதேனும் பணம் செலுத்தத் தவறினால, சொத்து தனியார் ஒப்பந்தத்தின் மூலம் புதிய ஏலம்/விற்பனைக்கு விடப்படும் EMD உள்ளிட்ட வைப்புத் தொகை டாடா கேபிட்டல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்-ஆல் பறிமுதல் செய்யப்படும், மேலும் தவறிய வாங்குபவர் சொத்துக்கான அனைத்து உரிமை கோரல்களையும் இழப்பார். 11) சொத்து பொறுப்பேற்க வேண்டிய டாடா கேபிட்டல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்-க்குத் தெரிந்த ஏதேனும் வில்லங்களின் விவரங்கள்: மேலே உள்ள அட்டவணையின்படி சொத்து வரி, மின்சாரம் போன்ற சட்டப்பூர்வ பொறுப்புகள் பகுதிகள் உட்பட, சொத்தின் மீதான வில்லங்கங்கள் குறித்து, விருப்பமுள்ள ஏலதாரர்கள் தாங்களாகவே சுயாதீன விசாரணைகளை மேற்கொள்ள அறிவுறுத்தப்படுகிறார்கள். 12) வேறு ஏதேனும் விவரங்களுக்கு அல்லது மின்னணு ஏலம் குறித்த நடைமுறை ஆன்லைன் பயிற்சிக்கு, வருங்கால ஏலதாரர்கள் சேவை வழங்குநர் M/s. 4Closure, பிளாக் எண். 605 ஏ, 6வது தளம், மைத்ரிவனம் கமர்ஷியல் காம்ப்ளக்ஸ், அமீர்பேட், ஐதராபாத் - 500038, மின்னஞ்சல் : info@bankauctions.in அல்லது மனிஷ் பன்சல், மின்னஞ்சல் ஐடி Manish.Bansal@tatacapital.com-ல் தொடர்பு கொள்ளலாம், அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி மொபைல் எண். 8588983696, உங்கள் சந்தேகங்களை வாட்ஸ்ஆப் எண் 9999078669-ல் அனுப்பலாம். 13) அதிகபட்ச ஏலத் தொகைக்கு மேல் 1% TDS பொருந்தும் மற்றும் அதிக ஏலதாரர் செலுத்த வேண்டும், ஏலதாரர் உரிமையாளர்/கடன் வாங்குபவரின் PAN-ல் பணம் செலுத்த வேண்டும் மற்றும் சலான் நகலை எங்கள் நிறுவனத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும். 14) மேலே உள்ள விவரங்களுக்கு பாதுகாக்கப்பட்ட கடன்அளித்தவரின் வலைத்தளமான https://surl.li/rhpnkd-ல் கொடுக்கப்பட்டுள்ள கீழே உள்ள இணைப்பை பார்க்கவும். 15) தயவுசெய்து இணைப்பையும் பார்வையிடவும்: https://www.tatacapital.com/property-disposal.html.

தயவுசெய்து கவனிக்கவும் - இந்த சொத்தின் விற்பனை/ஏலத்திற்காக TCHFL குறிப்பிடப்பட்ட ஏல பங்குதாரரைத் தவிர வேறு எந்த தரகர்/முகவரையும் ஈடுபடுத்தவில்லை, இந்த விஷயத்தில் அனைத்து கேள்விகள் மற்றும் விசாரணைகளுக்கும் ஆர்வமுள்ள தரப்பினர் கீழே கையொப்பமிட்டவரை அல்லது அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியை மட்டுமே தொடர்பு கொள்ள வேண்டும்.

இடம் : தமிழ்நாடு Sd/- அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
நாள் : 04.11.2026 டாடா கேபிட்டல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்

Reform ARC LIMITED ரீஃபார்ம் ARC லிமிடெட்
(முன்னர் ரிலையன்ஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி லிமிடெட் என அறியப்பட்டது)
2-வது தளம், ருசிசி சேம்பர்ஸ், சாக்கி விஹார் சாலை, MTNL தொலைபேசி நிலையத்திற்கு அருகில், பவாய், மும்பை 400072

பாதுகாக்கப்பட்ட சொத்துக்களை விற்பனை செய்வதற்கான அறிவிப்பு
[விதி 6(2) உடன் விதி 8(6)-ஐப் படிக்கவும்]

நிதிச் சொத்துக்களைப் பத்திரமாக்குதல் மற்றும் மறுசீரமைப்பு மற்றும் பாதுகாப்பு வட்டி அமலாக்கச் சட்டம் 2002-இன் கீழ், பாதுகாப்பு வட்டி (அமலாக்கம்) விதிகள், 2002-இன் விதி 8 (6)-இன் நிபந்தனையின் கீழ் அசையாச் சொத்துக்களை விற்பனை செய்வதற்கான மின்-ஏல விற்பனை அறிவிப்பு.

பொதுமக்களுக்கும், குறிப்பாக கடன்தாரர்(கள்) மற்றும் பிணையதாரர்(கள்) ஆகியோருக்கும் இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது என்னவென்றால், கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா/அசையும் சொத்து, பாதுகாக்கப்பட்ட கடன் வழங்குநரிடம் அடமானம் வைக்கப்பட்டுள்ளன அல்லது பிணையாக வழங்கப்பட்டுள்ளன; மேலும், இந்தச் சொத்துக்களின் நேரடி உடைமையை பாதுகாக்கப்பட்ட கடன் வழங்குநரின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி தனது சுவாதீனத்தில் எடுத்துக்கொண்டுள்ளார்.

ரிலையன்ஸ் ஹவுசிங் டெவலப்மென்ட் ஃபைனான்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட் நிறுவனம், 29.03.2019 மற்றும் 29.03.2023 ஆகிய தேதிகளில் மேற்கொள்ளப்பட்ட இரண்டு தனித்தனி ஒப்படைப்பு ஒப்பந்தங்களின் வாயிலாக, கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன் கணக்குகளுக்குரிய நிதிச் சொத்துக்கள்/கடன்களை, அவற்றுடன் தொடர்புடைய உரிமைகள், அதிகாரங்கள், நலன்கள் மற்றும் பிணையச் சொத்துக்களுடன் சேர்த்து, ரீஃபார்ம் ARC லிமிடெட் (முன்னர் ரிலையன்ஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி லிமிடெட் என்று அழைக்கப்பட்டது) நிறுவனத்திற்கு ஒப்படைத்துள்ளது. இந்நிறுவனம், RARC 059 (RHDFCL HL) Trust மற்றும் RARC 080 (RHDFCL HL) Trust ஆகியவற்றின் அறங்காவலராக செயல்படுகிறது. இந்த ஒப்படைப்பின்படி நாங்கள் உங்கள் பாதுகாக்கப்பட்ட கடன் வழங்குநராக மாறியுள்ளோம்; எனவே, ஒப்பந்தப்படி செலுத்த வேண்டிய முழுத் தொகையையும் சட்டப்பூர்வமாக வசூலிக்க எங்களுக்கு உரிமை உண்டு.

எனவே, RARC 059 (RHDFCL HL) டிரஸ்ட் மற்றும் RARC 080 (RHDFCL HL) டிரஸ்ட் ஆகியவற்றின் அறங்காவலரான ரீஃபார்ம் ARC லிமிடெட் (முன்னர் ரிலையன்ஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி லிமிடெட் என்று அழைக்கப்பட்டது)-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியான நான், உங்களுக்கு 15 நாள் கால அவகாசம் கொண்ட இந்த அறிவிப்பை வழங்குகிறேன். இதன்படி, கீழே குறிப்பிடப்பட்டுள்ள அடமானச் சொத்துக்கள், "எந்த நிலையில் உள்ளதோ அந்த நிலையிலேயே" என்ற அடிப்படையில், 23.11.2026 அன்று மின்-ஏலம் மூலம் விற்கப்படும். இந்த ஏலமானது, ரிலையன்ஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி லிமிடெட் சார்பாக, கடன்தாரர்கள்/அடமானதாரர்களிடமிருந்து பிரிவு 13(2)-ன் கீழ் வழங்கப்பட்ட கோரிக்கை அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையையும், அதனுடன் எதிர்கால வட்டி மற்றும் செலவுகளையும் வசூலிப்பதற்காக நடத்தப்படுகிறது. ஏலத்திற்கான குறைந்தபட்ச விலை மற்றும் முன்பண வைப்புத் தொகை விவரங்கள் பின்வருமாறு:

அடமான சொத்தின் விவரங்கள்

வ. எண்.	கடன்தாரரின் பெயர், சொத்து விவரங்கள், கோரிக்கை அறிவிப்பு மற்றும் சுவாதீனம் தேதி	ரிசர்வ் தொகை / EMD
	RARC 059 (RHDFCL HL) Trust and RARC 080 (RHDFCL HL) Trust	
1	சங்கர் J மற்றும் தேவிகா S, முகவரி: 2/44, குடியான தெரு, திருவெறும்பூர் வட்டம், அசூர், திருச்சிராப்பள்ளி, தமிழ்நாடு - 620015. மேலும், சர்வே எண் 22/பகுதி மற்றும் புதிய நத்தம் சர்வே எண் 336/5, கதவு எண் 2/44, அசூர் கிராமம், திருவெறும்பூர் வட்டம், திருச்சிராப்பள்ளி மாவட்டம், தமிழ்நாடு. மேலும், Mutton & Chicken Stall, 2/44, குடியான தெரு, அசூர், திருச்சிராப்பள்ளி, தமிழ்நாடு - 620015. சொத்து: பழைய நத்தம் சர்வே எண் 22/பகுதி மற்றும் புதிய நத்தம் சர்வே எண் 336/5-ல் அமைந்துள்ள நிலம் மற்றும் கட்டிடம். பரப்பு: 1453 சதுர அடி. அமைவிடம்: கதவு எண் 2/44, அசூர் கிராமம், திருவெறும்பூர் வட்டம், திருச்சிராப்பள்ளி மாவட்டம், தமிழ்நாடு (மொத்த பரப்பு 1453 சதுர அடி) கோரிக்கை அறிவிப்பு தொகை: ரூ. 10,52,332.57/- (ரூபாய் பத்து லட்சத்து ஐம்பத்து இரண்டாயிரத்து முன்னூற்று முப்பத்து இரண்டு மற்றும் ஐம்பத்து ஏழு பைசா மட்டும்) - 12.09.2018 தேதிய நிலவரப்படி, இதனுடன் வருங்கால வட்டி மற்றும் செலவுகள் உட்பட. ஆக்கபூர்வமான/நேரடியான சுவாதீனம் நாள் : 04.01.2023	Rs. 16,76,073/- Rs. 1,67,607/-

சொத்தினை பார்வையிடுதல் : 21.11.2026 from 11.00 A.M. to 02.00 P.M.
ஏலம் சமர்ப்பிக்கும் கடைசி நாள் : 22.11.2026 till 5.00 PM
மின்-ஏலம் நாள் : 23.11.2026 between 11.00 AM to 1 P.M with extension of 5 minutes each

விற்பனைக்கான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்:- 1. சொத்தானது நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச விலைக்குக் குறைவாக விற்கப்படமாட்டாது. மேலும், இந்த விற்பனை, பாதுகாக்கப்பட்ட கடன் வழங்குநரான 'REFORM ARC LIMITED' (முன்னர் 'Reliance Asset Reconstruction Company Limited' என்று அழைக்கப்பட்டது) நிறுவனத்தின் உறுதிப்படுத்தலுக்கு உட்பட்டது. 2. மின்னணு ஏலம் 'M/s. C1 INDIA PVT LTD' முகவரி: ... 122003 என்பவரால் இணையம் வழியாக நடத்தப்படும். 3. மின்னணு ஏலத்தில் பங்கேற்க விரும்பும் நபர்கள் ... www.bankeauctions.com என்ற இணையதளத்தில் தங்கள் பெயர்களைப் பதிவு செய்து, M/s. C1 INDIA PVT LTD நிறுவனத்திடமிருந்து பயனர் அடையாள எண் மற்றும் கடவுச்சொல்லைப் பெற்றுக்கொள்ள வேண்டும். 4. ஏலத்தில் பங்கேற்க விரும்பும் நபர்கள், M/s. C1 INDIA PVT LTD., நிறுவனத்திடமிருந்து மின்னணு ஏலம் குறித்த இணையவழிப் பயிற்சியைப் பெற்றுக்கொள்ளலாம். C1 INDIA PVT LTD., தொடர்பு கொள்ள வேண்டியவர்: திரு. தரணி கிருஷ்ணா, அலைபேசி எண்: +91 9948182222, Email: Delhi@c1india.com or Support@bankeauctions.com, உதவி எண்: 7291981124, 25, 26). 5. RARC 059 (RHDFCL HL) டிரஸ்ட் ... கணக்கு எண்: 6742557088, வங்கி: இந்தியன் வங்கி, ... பயனாளி பெயர்: RARC 059 (RHDFCL HL) Trust, IFSC குறியீடு: IDIB000S010. ... 6. RARC 080 (RHDFCL HL) டிரஸ்ட் ... கணக்கு எண்: 122505002146, வங்கி: ஐசிஐசிஐ வங்கி, ... மும்பை - 400058, பயனாளி பெயர்: RARC 080 (RHDFCL HL) Trust, IFSC குறியீடு: ICIC0001225. ... 15. சொத்தின் மீதான அனைத்து நிலுவைத் தொகைகள், வரிகள் VAT, TDS, GST போன்றவை, சட்டப்பூர்வ அல்லது பிற கட்டணங்கள், மற்றும் சொத்து விற்பனை தொடர்பான முத்திரை வரி (சாயதி) ...

வேறு ஏதேனும் தகவல்களுக்கு, 18001039711 / 18602664111 / 18003099711 ஆகிய எண்களில் தொடர்பு கொள்ளவும்.

பாதுகாப்பு நலன் (அமலாக்க) விதிகள், 2002-ன் விதி 6(2), 8(6) மற்றும் 9(1)-ன் கீழ் சட்டப்பூர்வமான 15 நாள் அறிவிப்பு

... அந்தச் சொத்தின் ஏதேனும் வீட்டு உபயோகப் பொருட்கள் அல்லது தனிப்பட்ட உடைமைகள் இருந்தால், அவற்றை இந்த அறிவிப்பு தேதியிலிருந்து 7 (ஏழு) நாட்களுக்குள் அங்கிருந்து அகற்றி எடுத்துச் செல்லுமாறு ...

இடம்: தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி - ரீஃபார்ம் ARC லிமிடெட்
நாள் : 04.11.2026 (முன்னர் ரிலையன்ஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி லிமிடெட் என்று அழைக்கப்பட்டது)

குறிப்பு: SARFAESI சட்டம், 2002-ன் பிரிவு 13(2)-ன் கீழ் கோரிக்கை அறிவிப்பு வழங்கப்பட்ட பிறகு செலுத்தப்பட்ட ஏதேனும் தொகை இருப்பின், அது பணமாக்கல்/திரும்ப காணும் நேரத்தில் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகைக்கு கணக்கில்கொள்ளப்படும்.

எமது பதிப்புகள்: சென்னை. புதுவை. வேலூர். கோவை. சேலம். திருச்சி. தஞ்சாவூர். மதுரை. ராமநாதபுரம். நெல்லை. பெங்களூரு. திருவனந்தபுரம்

Published by Vijaya Arun on behalf of KSL MEDIA LIMITED and Printed by Venkatesan K at THG PUBLISHING PVT.LTD. Ward No. 27, RS No. 43-1B, Ariyamangalam Zone, Varaganery Village, Chennai Bye Pass Road, Senthaneerpuram, Tiruchirapalli-620004. Editor: V. Venkateswaran (Responsible for selection of news under the PRP Act).